அதிலேயே நாட்டம் கொண்ட பகுதி இருந்தால்தான் இந்த வேலைகள் செம்மையான முறையில் நடைபெற முடியும். பொதுப்பணித் துறையில் இந்தப் பொறுப்பை விட்டால், அது அந்த அளவுக்கு நடைபெறாது என்று தான் இப்போது தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

கல்வி கமிஷன் பரிந்துரைகள்.

*** 326 வினா.—திரு. என். மருதாசலம் :** மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்வி கமிஷன் சிபார்சின் அடிப்படையில் மாநில ரீதியில் ஆரம்பக் கல்விக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களைப் பற்றியும் விவாதித்து முடிவெடுப்பதற்கு ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும், கல்வி நிபுணர்களும் சமபங்காகக் கொண்ட கல்விக் கூட்டுக் குழுக்களை அமைப்பது குறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டைப் பொறுத்த வரை கல்வி கமிஷன் பரிந்துரைத்திருப்பது போன்ற கல்விக் கூட்டுக் குழுக்களை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என் இந்த அரசு கருதுகிறது. ஆகவே, அரசு அந்த சிபாரிசை ஏற்றுக் கொள்ளும் நிலையிலில்லை.

திரு. என். மருதாசலம் : ஸார், நம் மாநிலத்திலே கல்விக் கமிஷன் சிபாரிசுப்படி, கல்வி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் ஆராய கல்விக் கமிஷன் ஒன்றை நம் மாநிலத்தில் ஏற்படுத்தினால் கல்வியின் தரம் உயரும், அதனால் கல்வி ஆசிரியர்களுக்கும் ஒரு உற்சாகம் ஏற்படும் என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோத்தாரிக் கமிஷன் இப்படிப்பட்ட ஒரு சிபாரிசு செய்திருக்கிறது, செய்யலாம் என்று. ஆசிரியர்களின் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகளின் பிரதிநிதிகள் கொண்ட கமிட்டி போட்டு, அதற்கு கல்வித்துறைச் செயலாளர் செயலாளராக இருந்து நடத்துவது என்று சிபாரிசு செய்திருக்கிறது. அப்படி அமைப்பதன் மூலமாக ஏற்படும் நன்மையை விட, இப்போது இருக்கிற முறையில் அதிக நன்மை ஏற்படக் கூடும். கல்வித் துறையில் அதிகார பூர்வமான சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தலைமை ஆசிரியர்கள் சங்கம், சவுத் இண்டியன் டீச்சர்ஸ் கில்ட் போன்ற பல்வேறு சங்கங்கள் தனித்தனியாக ஆராய்ந்து, சிபாரிசுகளை வழங்கி, அவைகளின் மீது தக்க முடிவு எடுக்க இப்போது இருக்கிற அமைப்பே நடைமுறைக்கு உகந்ததாக இருக்கிறது. இதற்காக ஒரு குழு அமைத்தால், பிரதிநிதிகள் ஒரு சிலர் தாம் இடம் பெறக் கூடும். அதிகாரிகளில் ஒருசிலர்தான் இடம் பெறக்கூடும். கல்வித் துறை செயலாளர் அந்தக் குழுவுக்குச் செயலாளராக இருப்பதால், அவரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்கும் நிலைமை இருக்கிறது. அந்த முடிவு அரசுக்கு வரும்போது, அமைச்சரவைக்கு வரும்போது அந்தச் செயலாளர் தான் ஆராயவேண்டும். அவரும் இருந்து அங்கே செய்த முடிவை அவரே இங்கு ஆராய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடர்பாடுகள் இருப்பதால், இப்போது இருப்பதே சரியாக இருக்கும். அவர்களைக் கேட்டுச் செய்ய ஆலோசனைக்குழு இருப்பதால் கல்வியின் நிலை, கல்வி நிலயங்கள் பற்றி இப்போது இருக்கிற முறையில், அடிப்படையில் பணியாற்றுவது வசதியாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது.

Neighbourhood schools

*** 327 *Q.*—THIRU K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government are contemplating to start "Neighbourhood schools" under which rich and poor students would have to study in the same schools since all schools would have the same basic facilities and standards ; and

(*b*) whether the Government will get any financial aid from the Central Government for such "Neighbourhood schools"?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, is it a fact that the Central Government have recommended to the Madras Government to start such schools because they are largely in vogue in England where most public schools have got "Neighbourhood" schools so as to feed not only children coming from the higher strata of society but also children coming from the lower strata of society?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நெய்பர்ஹுட் ஸ்கூல் இருக்கவேண்டும் என்பதை இந்தக் கல்விக் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது. நெய்பர்ஹுட் ஸ்கூல் என்ற அளவுக்கு அதன் நோக்கம் என்ன என்றால், ஒரு பள்ளி எந்தப் பகுதியிலே இருக்கிறதோ அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள்மட்டும்தான் அந்தப் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதாகும். அந்த அளவுக்கு நம் நாட்டுப் பெற்றோர்கள் இசைந்து வருவார்களா என்பது பிரச்னையாக இருக்கிறது. உதாரணமாக எடுத்துக்கொண்டால், ஒரு குறிப்பிட்ட உயர்நிலைப் பள்ளியில் அந்த ஏரியாவிலுள்ள மாணவர்கள் மட்டும்தான் சேரவேண்டுமே தவிர, வேறு பகுதி மாணவர்கள் அந்தப் பள்ளிக்கு வரக்கூடாது. க்ரிஸ்டியன் காலேஜ் ஸ்கூல் இருக்கிறதென்றால், அந்த ஸ்கூலைச் சுற்றி இருக்கிறவர்கள்தான் அந்த ஸ்கூலில் சேரவேண்டும். வடசென்னையில் இருக்கிற ஸ்கூல் என்றால், அந்தப் பகுதியிலுள்ள, அந்த ஸ்கூலைச் சுற்றி இருக்கிற மாணவர்கள் தான் அந்த ஸ்கூலில் சேரவேண்டும். வேறு பகுதி மாணவர்கள் இந்தப் பள்ளிக்கு வர முடியாது, இந்தப் பகுதி மாணவர்கள் வேறு பள்ளிகளுக்குச் செல்ல முடியாது. இது நம்முடைய நாட்டு நடைமுறைக்குச் சரிப்பட்டு வராது. துவக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், கிராமங்களில் அந்த முறைதான் இருக்கிறது. அந்த முறையைக் கொண்டு வந்தால் ஒரு பள்ளியில் கொண்டுசேர்க்க விரும்பும் பெற்றோர்கள் அந்தப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வரவேண்டும். அந்த முறையில் நெய்பர்ஹுட் ஸ்கூல்ஸ் என்று கட்டாயமாகக் கொண்டு வந்தால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பெற்றோர்கள் ஒரு குறிப்பிட்ட பள்ளியில் சேர்க்கவேண்டுமென்று நினைக்கலாம். அதற்காகப் பள்ளிக்கூடம் இருக்கிற இடத்திற்குக் குடியேற வேண்டியிருக்கும். அப்படிக் குடியேறிப் படிக்க வைப்பதிலே கஷ்டங்கள் இருக்கும். இப்போது எல்லாப் பள்ளிகளிலும் வசதிகளைப் பெருக்கவும், எல்லாப் பள்ளிகளும் ஒரே தரத்தில் இருக்கவும், எல்லா ஆசிரியர்களும் ஒரே தரத்தில் இருக்கவும், எல்லாப் பள்ளிகளிலும் உள்ள ஆய்வுக் கூடங்கள் ஒரே தரத்தில் இருக்கவும் கவனம் செலுத்திய பிறகு, எல்லாப் பள்ளிகளும் எல்லா முறையிலும் ஒரே தரமாக இருக்கிறது என்று கருதக்கூடிய நிலைமை வருமானால், அது வெற்றி பெறக் கூடும். அது வரையில் பெற்றோர்கள் விருப்பத்திற்கு மாறான காரியத்தைச் செய்யக் கூடாது.

பள்ளி உதவி மேற்பார்வையாளர்கள்

*328 வினா.—**திரு. மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூட உதவி மேற்பார்வையாளர்கள் (**Junior Deputy Inspectors of Schools**) ஓய்வு பெறும் வயது என்ன ?

(இ) அதை ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதுக்குச் சமமாக உயர்த்த யோசனையுள்ளதா ?